இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்
வெள்ளிக்கிழமை 23-02-2024

# மண் வளமும் மக்கள் நலனும்

நான்காவது வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்கள். அந்த அறிக்கையானது மண் வளம் காப்பதாக மட்டுமல்ல; மக்கள் நலனையும் காப்பதாக அமைந்துள்ளது.

**ஆட்சிக்கு வந்தால் வேளாண்மைக்கு என தனி நிதிநிலை அறிக்கையைக் கொண்டு வருவோம் என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். சொன்னதைச் செய்தார்கள். ஆண்டு தோறும் வேளாண்மை நிதி நிலை அறிக்கை வெளியாகி வருகிறது. இது நான்காவது ஆண்டு ஆகும்.**

**கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம், விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம், நீர்ப்பாசன நவீன மயமாக்கல் திட்டம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை, மண்வள மேலாண்மை, இளைஞர்களை தொழில் முனைவோர் ஆக்குதல் - ஆகிய திட்டங்கள் கடந்த காலத்தில் செயல்படுத்தப்பட்டதன் மூலமாக பலன்களை நேரடியாகப் பார்த்தோம். இதனால் பாசனப் பரப்பு அதிகமாகி உள்ளது. உற்பத்தியும் அதிகமாகி உள்ளது.**

உணவு தானிய உற்பத்தியில் மகத்தான சாதனை நடந்தது. 119.98 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டை விட 11 சதவிகிதம் இது அதிகம் ஆகும். 79.06 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தியும், 35.92 இலட்சம் மெட்ரிக் டன் சிறுதானிய உற்பத்தியும் 4.99 லட்சம் மெட்ரிக் டன் பயறு உற்பத்தியும் செய்யப்பட்டுள்ளது. இவை முந்தைய ஆண்டை விட 4 சதவிகிதம் அதிகம் ஆகும். காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி செய்ய ஜூன் 12 ஆம் தேதியோ -அதற்கு முன்போ மேட்டூர் அணை திறந்து விடப்பட்டது. காவிரி டெல்டா உழவர்களுக்காக ரூ.61 கோடிக்கு குறுவை தொகுப்பு உதவித் திட்டம் வழங்கப்பட்டது. அரிசி மட்டுமல்லாமல் சிறுதானிய உற்பத்தியிலும், பயறு உற்பத்தியிலும் சாதனை படைக்கப்பட்டது. பருத்தி, தென்னை என அனைத்திலும் கவனம் குவிக்கப்பட்டது.

காவிரிப் பாசனப்பகுதியில் உள்ள கால்வாய்களை தூர்வாருவதற்காக 2021-22 ஆம் ஆண்டில் 62.91 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 3 ஆயிரத்து 859 கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் செய்யப்பட்டதால் 4.90 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடியும், 13.341 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டு 39.73 இலட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டது. இவை அனைத்தும் கடந்த காலச் சாதனையாகும். இதனால்தான் பாசனப் பரப்பும் அதிகம் ஆனது. உற்பத்தியும் அதிகம் ஆனது.

இதேபோன்ற சிறப்பான முன்னெடுப்புகள் கொண்டதாக 2024-25 ஆம் ஆண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கையும் அமைந்துள்ளது. **இந்த அறிக்கையில் முக்கியமான இரண்டு பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. ஒன்று மண் வளத்தை காப்பது.**

**இரண்டு, மக்களின் மனவளத்தை காப்பது. இவை இரண்டையும் மனதில் வைத்து திட்டங்களைத் தீட்டி உள்ளார்கள்.**


CM MK MKS - **என்பது ஒரு திட்டத்தின் பெயர். 'முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்' என்பது மகத்தான திட்டம் ஆகும். பயிர்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகளை அதிகம் பயன்படுத்துவதால் மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் இறந்து போகின்றன. இதனால் மண் வளம் குறைந்து போகிறது. இதைத் தடுப்பதற்கான திட்டம் தான்** CM MK MKS - **என்பது ஆகும். ரசாயன மருந்துகளைக் குறைப்பதில் அக்கறை காட்டப்பட்டுள்ளது. பூச்சி, நோய் தாக்குதலை கட்டுப்படுத்த வேப்ப மரக் கன்றுகள் இலவசமாக வழங்கப்பட இருக்கின்றன.**

பசுந்தாள் உர விதைகளை அதிகம் கொடுத்தும், மண்புழு உரத்தை தயாரித்தும், களர் அமில நிலங்களைச் சீர்திருத்தம் செய்வதன் மூலமாகவும் மண் வளத்தை காக்கத் திட்டமிட்டுள்ளார்கள்.


அடுத்து மக்கள் நலன் ஆகும். பாரம்பரிய காய்கறி ரகங்கள் உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்பட உள்ளது. செங்காந்தள், மருந்து கூர்க்கன், அவுரி சென்னா, நித்திய கல்யாணி ஆகிய மூலிகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட உள்ளன. ஊட்டச்சத்து மிகுந்த சிறு தானியங்களை அதிகமாக பயிரிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மரபு சார் நெல் ரகங்களைப் பாதுகாக்க பாரம்பரிய நெல் ரகங்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட உள்ளன. நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற செறிவூட்டப்பட்ட நெல் ரகங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளார்கள். நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் சிவன் சம்பா என்ற நெல் ரகம் 1000 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்ய விதைப் பைகள் வழங்கப்பட உள்ளன.

**இப்படி மண்ணைக் காப்பதாகவும், மக்களைக் காப்பதாகவும் அமைந்துள்ளது வேளாண் நிதிநிலை அறிக்கை.**

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (21.2.2024) அவரது இல்லத்தில், சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் கிழக்கு பகுதி 70(அ) வட்டக் கழகச் செயலாளர் டி.சந்திரசேகர் மகன் சி.தனேஷ்குமார் – ஆர்.டில்லிராணி (எ) திவ்யா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்தார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, கொளத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் ஐ.சி.எப். வ.முரளிதரன், கொளத்தூர் மேற்கு பகுதி செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான டி.நாகராசன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 23 கோடியே 53 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள், நான்கு காவல் நிலையங்கள் மற்றும் சென்னை, அசோக் நகரில் சிலை கடத்தல் பிரிவு காவல் நிலையம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா.விசுவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில்

# "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024"

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, பிப்.23-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் மகளிர் நலனை மேம்படுத்திடும் வகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் தயாரிக்கப்பட்ட "தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024"ஐ வெளியிட்டார்.

சமூகத்தில் பெண்களின் வளர்ச்சியைக் கொண்டே அச்சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை மதிப்பிட இயலும். இதன் பொருட்டு, பாலின வேறுபாட்டினைக் களைந்திடவும், பெண்களுக்கேற்ற பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்திடவும், பெண்களின் நிலையினை மேம்படுத்தும் வகையிலும், தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி, அவற்றை சீரிய முறையில் செயல்படுத்தி, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக திகழச் செய்துள்ளது.

முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், சமூக நீதி, சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் போன்றவற்றின் அடிப்படையில் இம்மாநில மகளிர் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கொள்கையானது, 10 ஆண்டுகளுக்கு அல்லது அடுத்த புதிய கொள்கை உருவாக்கப்படும் வரை நடைமுறையில் இருக்கும். மேலும், இக்கொள்கையினை ஐந்தாண்டுகளுக்கு பிறகு மறுஆய்வு செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் மகளிர் மேம்பாட்டிற்கென தனியான ஒரு கொள்கையை வெகுசில மாநிலங்களே இதுவரை வெளியிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**மாநில மகளிர் கொள்கையின் முக்கிய சிறப்பம்சங்கள் குறிக்கோள்கள்:**

பாலின உணர்திறன் கொண்ட கல்விமுறையை நிறுவுதல் மற்றும் பெண்குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தைக் குறைத்தல்.

வளரிளம் பெண்கள் மற்றும் மகளிரின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல்.

வேலைவாய்ப்புகளில் மகளிரின் பங்களிப்பை அதிகரித்தல்.

அனைத்து அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத பணிகளில் உள்ள பெண் பணியாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் அவர்களுக்கு உகந்த பணியிடங்களை உறுதி செய்தல்.

பெண்கள் நிர்வகிக்கும் சிறு தொழில்கள் மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளித்தல்.

பெண்கள் அதிக ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளை பெறுவதற்கு டிஜிட்டல் கல்வியறிவை ஊக்குவித்து டிஜிட்டல் பாலின இடைவெளியைக் குறைத்தல்.

தொழில் துறையில், பயிற்சி மற்றும் திறன்மேம்பாட்டை வழங்குவதன் மூலம் மகளிரிடையே நிலவும் திறன் இடைவெளியைக் குறைத்தல்.

நிறுவனக் கடன் வசதிகளை அணுகுதல் மற்றும் தேவைப்படும் மகளிருக்கு வங்கி கடனுதவி அதிகம் கிடைப்பதற்கு வழிவகை செய்தல்.

மகளிரை அரசியல் களத்தில் பங்கேற்க ஊக்கப்படுத்துதல்.

**செயல்படுத்துதல்**

அரசில் உள்ள பல்வேறு துறைகள் மற்றும் பங்குதாரர்களின் பங்கேற்பின் மூலம் முன்முயற்சிகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் இந்த கொள்கையின் நோக்கத்தினை அடைய வழிவகை செய்யப்படும். இக்கொள்கையில் இணைந்துள்ள பல்வேறு துறைகள், தங்கள் திட்டங்களை கொள்கையின் நோக்கங்களுடன் இணைந்து உருவாக்க வேண்டும்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையானது ஒருங்கிணைக்கும் துறையாக இக்கொள்கை செயல்படுத்துதலை கண்காணிக்கும். சமூக நலத் துறை இயக்குநரக அலுவலகத்தில் 'செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பு அலகு' அமைக்கப்படும்.

**கண்காணித்தல்**

தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் உயர்மட்ட அளவிலான பெண்கள் உரிமைக் குழு, தொடர்புடைய பிற துறைகளுடன் இணைந்து ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கூடி, தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கையை செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்துஇடைக்காலதிருத்தங்களை பரிந்துரைக்க வேண்டும். இதே போன்று, மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கொள்கையின் செயலாக்கத்தை கண்காணித்து, எதிர்கொள்ளப்படும் சவால்களை சரிசெய்ய வேண்டும்.

இக்கொள்கை, சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியலில் அதிகாரப் பகிர்வை பற்றி எடுத்துரைப்பதுடன், கல்வி, வேலைவாய்ப்பு, திறன் வளர்ப்பு ஆகியவற்றில் மகளிரின் நிலையை மேம்படுத்துவதுடன், மகளிர் தங்களுக்குள் புதைந்துள்ள, இதுவரை கண்டறியாத சக்திகளை வெளிக்கொணர்ந்து பெண்கள் சுயமரியாதையுடன் வாழ்ந்திடவும், அவர்களுக்கு பாதுகாப்பான, ஆரோக்கியமான, இலட்சியம் நிறைந்த சூழலை உருவாக்க ஏதுவாக இருக்கும்.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நலத்துறை ஆணையர் திருமதி வே.அமுதவல்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில்

# ரூ.17 கோடி செலவில் அரசு ஓய்வு இல்லம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, பிப்.23-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2024) தலைமைச் செயலகத்தில், பொதுத்துறை சார்பில் சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் 17 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 59 அறைகள் கொண்ட அரசு ஓய்வு இல்லத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

அரசு அலுவலகப் பணி நிமித்தமாக சென்னைக்கு வருகை புரியும் அரசு அலுவலர்கள் தங்குவதற்கு ஏதுவாக சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் இருந்த அரசு ஓய்வு இல்லம் இடிக்கப்பட்டு, அவ்விடத்தில் பொதுத்துறை சார்பில் 37,484 சதுர அடியில், நான்கு தளங்களுடன் 17 கோடி ரூபாய் செலவில் புதிதாக அரசு ஓய்வு இல்லம் கட்டப்பட்டுள்ளது.

இப்புதிய அரசு ஓய்வு இல்லம், 4 தளங்களிலும் குளிர்சாதன வசதியுடன் 59 அறைகள், வாகனம் நிறுத்துமிடம், சமையல் அறை, உணவு பாதுகாப்பு அறை, விருந்தினர்கள் பயன்பாட்டிற்காக இரண்டு மின் தூக்கிகள் போன்ற பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத்துறைச் செயலாளர் கே. நந்தகுமார் மற்றும் பொதுத் துறை துணைச் செயலாளர் (மரபு) திருமதி ஜெ.இ.பத்மஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.